# Assessing critical thinking in media literacy of secondary school students: special focus to Nallur Division of Jaffna District

## உயர்தர மாணவர்களின் ஊடக அறிவு தொடர்பிலான விமர்சனத்திறனை மதிப்பிடல்: யாழ் வலய நல்லூர் கோட்ட 1AB பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டமைந்தது

**P. Rajeswaran**
*Lecturer*
*Jaffna National College of Education, Jaffna, Sri Lanka*

**S. Navaneethakrishnan**
*Assistant Librarian,*
*Library, University of Jaffna, Sri Lanka*
*ksnavan@yahoo.com*

### Abstract

*After an introduction to information and knowledge society concepts, the influx of new media technologies has the potential to affect the library and education sectors radically. To successfully navigate today's data-rich and complex media environment, the concepts of literacy, i.e. media literacy and information literacy becomes an increasingly valuable asset. Media Literacy is similar to information literacy, defined as the ability to access, analyze, evaluate, and produce communication in a variety of forms. Media literacy involves critical thinking, analytical skills, and the ability to express oneself in different ways. The objective of this study is to identify specific aspects on critical understanding skills in media literacy of secondary school students selected from Nallur division of Jaffna district by analyzing critical competency to examine, understand, question, and evaluate the ways in which different media produce meaning. Research method of this study is quantitative analysis. Questionnaire designed by the UNESCO with the reference to Global Media and Information Literacy Assessment Framework has been used as the data collection tool. Using stratified random sampling method, 120 students in secondary level from 5 public high schools in Nallur division of Jaffna district were selected for the survey. The results indicate that the majority of the students have to improve their critical thinking and analytical skills in media. They can differentiate the attraction and reality in the advertisements. Even though most of them (62%) have compared the information received from different media to get the authoritative information; many students have inadequate awareness of media regulation to evaluate the ethics behind it. Majority (85%) of students indicate lack of involvement in any media activities. Fewer students demonstrate skills in conducting critical search and participation in development activities using media. Half of the students never participated in critical discussions or other civic activities in online social networks. Perceptions of media education among students indicate*

*lack of knowledge. Finally, based on the findings from the above survey, it is recommended to implement media literacy development programmes at school level.*

***Keywords:*** *Media literacy, Information literacy, School libraries, Education*

**ஆய்வுச் சுருக்கம்**

*அறிவுச் சமூக உருவாக்கத்திற்கான இலங்கையின் கலைத்திட்ட அறிமுகங்களின் பின்னணியில் ஊடகக் கற்கை நெறி பாடசாலை மற்றும் உயர் கல்வி மட்டங்களில் அறிமுகம் செய்யப்பட்டு; கற்றல் கற்பித்தல் நடைமுறைகள் இடம் பெற்று வருகின்றது. வெகுசன ஊடக கலாசார தாக்கங்கள் சமூகத்தில் நேரான விளைவுகளை ஏற்படுத்துகின்ற அதேவேளை ஒப்பீட்டுரீதியில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றமை உணரப்படுகின்றது. இத்தகைய பின்னணியில் ஊடகம் மற்றும் அதன் உள்ளடககம் தொடர்பிலான பயன்படுத்தும் திறன், மதிப்பிடும் திறன், பிரயோகிக்கும் திறன், ஒப்பிடும் திறன், ஆகிய செயன்முறைகளை கொண்டதாக ஊடக அறிவு எண்ணக்கரு அறிமுகம் செய்யப்படுகிறது. "உயர்தர மாணவர்களின் ஊடக அறிவு தொடர்பிலான விமர்சனத்திறனை மதிப்பிடல்" (யாழ் வலய நல்லூர் கோட்ட 1AB பாடசாலைகளை அடிப்படையாக கொண்டமைந்தது) எனும் இவ்ஆய்வு உயர்தர மாணவர்களின் ஊடக அறிவு தொடர்பிலான விமர்சனத்திறனை இனங்காணல், பகுப்பாய்வு செய்தலும் மதிப்பிடலும், ஊடக அறிவு விருத்திக்கான வழிமுறைகளை இனங்கண்டு விதந்துரைத்தலும் பிரதான நோக்கங்களாக கொண்டமைகிறது. இவ் ஆய்வு அளவைசார் ஆய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி நல்லூர் கோட்ட 1AB பாடசாலையில் உயர்தர மாணவர்களை ஆய்வுக் குடித்தொகையாக கொண்டு வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகள் கணனி புள்ளிவிபர ஆய்வு முறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இறுதியாக பகுபாய்வின் ஊடாக பெறுபேறுகளின் அடிப்படையில் ஊடக விமர்சன அறிவு மட்டம் தாழ்மட்டத்தில் உள்ளமை கண்டறியப்பட்டது. ஊடக விமர்சன அறிவு மட்டத்தை உயர்த்துவதற்கு பாடசாலை மட்டத்தில் ஊடக அறிவு கலைத்திட்டத்தை அறிமுகம் செய்தல், ஊடக கழக செயற்பாடுகளை விரிவாக்கல், ஊடக அறிவுப் போட்டிகளை நடாத்துதல், ஊடக அறிவு தின நிகழ்வுகளை கொண்டாடுதல், கல்விக் கொள்கை வகுப்பினர் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஊடக கல்விக்கான ஆசிரிய பயிற்சி வாய்ப்புக்களை அறிமுகம் செய்தல், ஊடகத்துறையினருக்கு ஆரோக்கியமான ஊடக பண்பாட்டை கட்டியெழுப்புவதற்கான வாண்மைத்துவ அறிவூட்டல்களை விரிவுபடுத்துதல,பல்கலைக்கழக மட்டத்தில் ஊடக அறிவு ஆய்வுப் புலங்களை விரிவுபடுத்துதல், பொதுமக்களுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டங்களை முன்னெடுத்தல், அரசசார்பற்ற நிறுவனங்கள் சமூகம்- ஊடகம் இணைந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் ஆகிய அணுகுமுறைகள் ஊடாக ஊடக அறிவு விருத்தியை மேம்படுத்த முடியும்.*

## 1.0 அறிமுகம்

இன்றைய தகவல் யுகத்தில் ஊடகங்களின் பயன்பாடு சமூகத்திலும், தனிமனித மட்டத்திலும் மிக உயர்நிலையில் காணப்படுகின்றன. அறிவுச் சமூக உருவாகத்தின் தொழினுட்ப அறிமுகங்கள் புதிய ஊடகங்கள் பலவற்றை வெளிக்கொணர்ந்துள்ளன. தனிநபர் வாழ்க்கையின் பிரதான அடிப்படை தேவைகளில் ஒன்றாக ஊடகங்கள் அதாவது வெகுசன ஊடகங்கள் மற்றும் நவீன ஊடகங்களின் பயன்நிலைகள் அவசியமாகியுள்ளன. உலகமயமாக்கல், பூகோள கலாசார உருவாக்கங்கள், வர்த்தகமயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கல் எழுச்சிகள் ஊடகங்களின் முதன்மை தன்மையை மேலோங்கச் செய்துள்ளன.

ஊடக வழி மூலமான தொடர்பாடல்கள் மற்றும் தகவல் பரவலாக்கங்கள் தனிமனித வள மேம்பாட்டுக்கும் தேசிய அபிவிருத்திக்கும் தரக் குறிகாட்டிகளாக கணிப்பிடப்படுகின்றன. ஊடகங்கள் தனிமனித, சமூக அபிவிருத்திக்கு பிரதான கருவியாக பயன்படுகின்ற நேர்த்தாக்கங்களை கொண்டுள்ள அதேவேளை தனிமனித சமூக வன்முறைகள், முரண்பாடுகள், தவறான நடத்தைக்கான தூண்டல்கள், முரண்பாடுகள், ஊடக கலாசார திணிப்புக்கள் போன்ற எதிர்மறை தாக்கங்கள் ஏற்படுத்தப்படுவதும் உணரப்படுகின்றன.

இத்தகைய பின்னணியில் ஊடகங்களின் பயன்பாடுகளை ஆரோக்கியமான நேர்வழியில் அணுகுவதற்கும், எதிர்மறை தாக்கங்களில் இருந்து சுயஒழுங்குபடுத்தல்களையும், விழிப்புணர்வையும் உருவாக்கும் வகையில் அறிமுகம் செய்யப்பட்ட சிந்தனையாக "ஊடக அறிவு" காணப்படுகின்றது. பாடசாலை மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் ஊடகக்கல்வி கலைத்திட்டத்தினூடாக ஊடக அறிவுதிறன் தகவு நிலைகளை எய்துவதற்கான வழிமுறைகள் சமகாலத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

இலங்கையின் வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் நகரத்தை மையமாகக் கொண்ட நல்லூர் கோட்ட 1AB பாடசாலைகள் ஐந்தில் உயர்தர மாணவர்களை ஆய்வுக் குடித்தொகையாகக் கொண்டு நல்லூர் கோட்டத்தில் நகரத்தை அண்டி மூன்று பிரபல பாடசாலைகளும், கிராமத்தை அண்டி இரண்டு பாடசாலைகளும் தெரிவுசெய்யப்பட்டன. இப்பிரதேச மாணவர்கள் பெரும்பாலும் தமிழ் கலாசாரத்தையும், தமிழ்மொழியையும், இந்து சமயத்தை கொண்டவர்கள். மிகச் சிறிய அளவில் கத்தோலிக்கம் மற்றும் முஸ்லீம் மாணவர்கள் காணப்படுகின்றனர்.

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள மக்கள் பல தரப்பட்ட சமூக பொருளாதார பின்னணியை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். பெரும்பாலும் அரசாங்க தொழில், வியாபாரம், விவசாய தொழில் புரிபவர்களாக உள்ளனர். இலங்கையில் முன்னணி கல்வி அடைவுகளை வெளிப்படுத்தும் கல்லூரிகளை உள்ளடக்கியதாகவும் நல்லூர் கோட்டம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஊடகங்களின் செயற்பாடுகள் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த தாகவும், அடிப்படை தேவைகளாகவும் மாற்றம் பெற்றுள்ளன. சமூகத்தின் கலாசாரத்தை கட்டியெழுப்பும் முதன்மை முகவர்களாக ஊடகங்கள் வகிபங்கு பெறுகின்றன.

ஊடகங்கள் தனிநபர் மற்றும் சமூக நடத்தையை கட்டியெழுப்புவதிலும், அவற்றின் நிகழ்ச்சி நிரலை தீர்மானிப்பதிலும், கலாசார கூறுகளை வலுப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. சமூக நிறுவனமாகிய பாடசாலையில் கற்கின்ற மாணவர்களின் செயற்பாடு களுடனும், நடத்தையுடனும் ஊடகப் பயன்பாடு அதிக செல்வாக்கு பெற்றுள்ளதை உணரக் கூடியதாக உள்ளன. ஊடகங்கள் அபிவிருத்திக்கும், ஆக்கத்திற்கும் பயன்படுகின்ற அதேவேளை சமூக

முரண்பாடுகள், வன்முறைகள் அதிகரிக்கவும், தனிநபர் நிகழ்ச்சி நிரலை தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக மாற்றம் பெற்றுள்ளன. ஊடகங்களை மாணவர்கள் ஆக்க பூர்வமாகவும், தமது விருத்திக்கும், தேவைகட்கும், நேர்விளைவுகளுக்கும் பயன்படுத்துவதற்கான அறிகை விருத்தி ஊடகஅறிவு (Media literacy) என குறிப்பிடப்படுகின்றது. இவ் ஆய்வு பாடசாலை உயர்தர மாணவர்களின் ஊடகப் பயன்பாடு தொடர்பிலான ஊடக அறிவு மட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக அமைகின்றது.

## 2.0 இலக்கிய மீளாய்வு

ஆய்வாளரினால் "“உயர்தர மாணவர்களின் ஊடக அறிவு தொடர்பிலான விமர்சனத்திறனை மதிப்பிடல்”எனும் ஆய்வுத் தலைப்பை அடிப்படையாகக் கொண்ட முதன்மைபதவிளக்கம்,ஆய்வத் தலைப்புடன் இணைந்த கோட்பாட்டு விளக்கங்கள், வரைவிலக்கணங்கள்,முன்னையஆய்வு முடிவுகள் ஆகியன முன்வைக்கப்பட்டுள்ளன. மேற்படி தலைப்பைமையப்படுத்தியவகையில் அபிவிருத்தி அடைந்த மேலைத்தேச நாடுகளினால் தேசிய மட்டங்களிலும் பிராந்தியமட்டங்களிலும், பல்வேறுபட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது நாட்டை பொறுத்தமட்டில் மேற்படி தலைப்புடன் நேரடியான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

ஊடகம் என்பது தகவலை வெளிப்படுத்தவும், பகிர்வதற்கும், பொதுமைப்படுத்தவும், சேமிக்கவும், உள்வாங்கிக் கொள்ளவும், அனுப்புவதற்கும் ஊடுகடத்தி (Channel) ஆகும். தொடர்பாடல் கூறுகளில் ஒன்றாகும், தொடர்பாடலின் வினைத்திறன், விளைதிறனை தீர்மானிக்கும் கூறாகவும் விளங்குகின்றது. சமூகத்தில் தாக்கம் மிக்கதும், முதன்மை மிக்கதுமான தொடர்பாடல் வகைப்பாடாக வெகுசனத் தொடர்பாடல் மற்றும் நவீன தொடர்பாடல் கணிப்புப் பெற்றுள்ளது. சமூக அசைவு நிலைகளை தீர்மானிப்பவையாகவும், அனைத்து தரப்பினரின் கவனத்தை பெற்ற தொடர்பாடல் வகைப்பாடாகவும் இது அமைகின்றது.

வெகுசன தொடர்பாடல் மற்றும் நவீன தொடர்பாடல் என்பது வெகுசன ஊடகங்கள், நவீன ஊடகங்களை பயன்படுத்தி குறித்த ஒரு நேரத்தில் பெருத்திரளான மக்கள் கூட்டத்துடன் தொடர்பாடலை மேற்கொள்கின்ற செயன்முறையை குறிக்கின்றது. தொடர்பாடுபவர் தனக்கு முன்னால் இல்லாத போது பெருந்தொகை மக்கள் கூட்டத்துடன் வெகுசன ஊடகங்களை (Mass media) கொண்டு தொடர்பாடலை மேற்கொள்ளல் வெகுசனத் தொடர்பாடல் (Mass communication) எனப்படும் (தொடர்பாடல் ஊடகக்கற்கை, பாடப்புத்தகம், 2008). வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையின் வினைத்திறனையும், விளைதிறனையும் வலுப்படுத்துவதாக நவீன தொடர்பு ஊடகங்கள் பயன்படுத்தப்படுவதை சமகால வெகுசன தொடர்பாடல் நிலைமைகளில் அவதானிக்க முடிகின்றன. ஊடக அறிவு என்பது வெகுசன மற்றும் நவீன தொடர்பாடல் வகைப்பாட்டுடன் மிக நெருக்கிய தன்மையை கொண்டமைந்தது. வெகுசன மற்றும் நவீன ஊடக தாக்கம், உயர் பயன்பாட்டுத் தன்மை ஊடக அறிவு - ஊடகக் கல்வி பற்றிய எண்ணவாக்கத்தை சமகாலத்தில் முதன்மை பெறச் செய்துள்ளன.

- அச்சு ஊடகங்கள்
- வானொலி
- தொலைக்காட்சி
- இணையம்
- சமூக ஊடகங்கள் (facebook, skye, Blogs)
- இலத்திரனியல் விளையாட்டுக்கள்
- கைத்தொலைபேசி
- திரைப்படம்

போன்ற ஊடகங்களின் பயன்நிலைகள் சமூகத்தில் அதீத செல்வாக்கை பெற்றுள்ளன. சமூக அசைவியக்கத்தை தீர்மானிக்கின்ற, சமூக கலாசாரத்தை, பூகோள கலாசாரத்தை, தனிமனித சமூக நடத்தை கோலத்தை கட்டியெழுப்புகின்ற காரணிகளாக இவை முதன்மை பெற்றுள்ளன.

வெகுசன நவீன ஊடகங்களின் பயன்பாடுகள் நேர்மயமான விளைவுகளை (Possitive Impacts) ஏற்படுத்துகின்ற அதே வேளை எதிர்மறை விளைவுகளையும் (Negative

Impacts) தோற்றுவிக்கின்றமையை சமூகத்தின் முரண்நிலைகள் மற்றும் வன்முறைகள் உணர்த்தி நிற்கின்றன. இத்தகைய பின்னணியில் தனிநபர் மற்றும் சமூகத்தில் ஆரோக்கியமான வெகுசன மற்றும் நவீன ஊடக பயன்பாட்டுத் திறன் தகவு நிலையை கட்டியெழுப்பவும், சமூக நபர்கள் செயற்படு பெறுநராகவும், பயனாளியாகவும், நுகர்வோராகவும் மாற்றம் பெறவும் வழிகாட்டுவதாக "ஊடகக்கல்வி வழியினூடான ஊடக அறிவு" எண்ணக்கரு உலகளாவிய ரீதியில் அறிகைசார் செயன்முறையாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

வெகுசன ஊடகங்கள் அறிவித்தல், மகிழ்வித்தல், கற்பித்தல் பணிகள் மட்டுமன்றி ஒரு செயலை செய்ய தூண்டும் பணியை செய்கிறது. (Jacques Leaute). தகவலை பரப்புதல், சமூகமயமாதல், ஒரு குறிப்பிட்ட செயலை புரிய தூண்டுதல், பொது மக்களின் வெளிப்பாட்டை ஊக்கப்படுதல், அறிவு வளர்ச்சி ஏற்படுத்தல், பண்பாட்டை ஊக்குவித்தல், மகிழ்ச்சியை ஏற்படுத்தல், முழுமையாக்குதல் செயற்பாடுகளை வெகுசன ஊடகங்கள் முன்னெடுக்கின்றன. (யுனெஸ்கோ அறிக்கை). பொது மக்களுக்கு இரசனையூட்டல், மகிழ்வூட்டல், செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளையும், ஆக்கப் படைப்புக்களையும் முன்வைப்பதை உணரக்கூடியதாக உள்ளன. (D. Lasswell, 1948)

உலகமயமாக்கல், அறிவுச்சமூகம், அறிவுப் பொருளாதார மேல் எழுச்சிகள் தகவல் பரிமாற்றத்திற்கான ஊடக செயலொழுங்குகளின் தேவைப்பாட்டை அதிகரிக்கச் செய்துள்ளன. இதன் காரணமாக நேர் விளைவுகள் (Possitive Impacts) எதிர் விளைவுகள் (Negative Impacts) உருவாக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகிவிட்டன. இத்தகைய பின்னணியில் சமூகத்தின் அபிவிருத்திக்கான, ஆரோக்கியத்திற்கான ஊடக பயன்பாடு பற்றிய எழுச்சிக்கான கருவியாக ஊடக அறிவு பாடசாலை கலைத்திட்டத்தில் உள்ளடக்கபப்பட்டு வருகின்றது

"ஜனநாயக சமூகத்தில் ஊடகத்தின் மூலம் முன்வைக்கப்படுகின்ற விடயங்களை மக்கள் தமது ஆற்றல், தேவை, சூழ்நிலைகட்கு ஏற்ப விளங்கி அல்லது உணர்ந்து, ஊடக உள்ளடக்கத்தையும், ஊடகப் பண்பின் குறைநிறைகளையும் சீர்தூக்கி பார்த்தல்" (யுனெஸ்கோ) "ஊடகத்தினால் முன்வைக்கப்படுகின்ற செய்திகளை நுகர்வதற்கு, பகுப்பாய்வதற்கு, மதிப்பிடுவதற்கு, நிர்மாணிப்பதற்கு பெற்றுக் கொள்ளப்படும் ஆற்றல்" , (ஐரோப்பிய ஆணைக்குழு)

ஊடக அறிவுத் தேர்ச்சிகள் பின்வரும் ஆற்றல்களை வளர்க்க உதவுகின்றன.

- விமர்சனத் திறன்களை வளர்ப்பதற்கு
- ஊடக செய்தி நாட்டின் கலாசாரம், சமூகத்தை எவ்வாறு வரையறை செய்கின்றனஎன்பதை அறியும் தன்மைக்கு.
- விளம்பர நுட்பங்களை அடையாளம் காண்பதற்கு (Market Strategies)
- ஊடக செய்திகளை உருவாக்குபவர்கள் எவ்வாறு மக்கள் ஊடக செய்திகளை அணுகுவார்கள் என அறிந்து; மக்கள் தங்களின் வலைக்குள் அகபப்டுதலை அடையாளம் காண்பதற்கு.
- பக்கம் சார்தல், பிழையான தகவல்கள் என்பவற்றை அடையாளம் காணல்.
- மக்களிடம் தெரிவிக்கப்படாத தகவல்களை அறிவதற்கு
- எங்களுடைய தேர்ச்சிகள், நம்பிக்கைகள், விழுமியங்களினூடாக ஊடக செய்திகளை
  பகுப்பாய்வு செய்வதற்கு
- ஊடக செய்திகளை உருவாக்கவும் வெளியிடுவதற்குமான ஆற்றல்.
- ஊடக நடைமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவும் ஆற்றல்.
  (Aspen media literacy Leadership Institute, 1992)

ஊடக பயன்பாட்டின் அடிப்படையில் மூன்று வகையான பெறுநர்களை அடையாளப்படுத்த முடியும்.

1)**செயற்படாத பெறுநர் (Inactive Recipient)** ஊடகம் தொடர்பிலான விமர்சன ரீதியான திறன், அறிவு, விளக்கம், மனப்பாங்கு, தேர்ச்சி அற்ற நிலையில் உள்ளோர். ஊடகம் முன்வைக்கின்ற விடயங்களை முழுமையாக நம்பிக்கை கொள்வோர்.

2)**மந்த பெறுநர் (Passive Recipient)** ஊடக அறிவும் ஆற்றலும் காணப்பட்டாலும் அதனை பிரயோகிக்க முன்வருவதில்லை.

3)**செயற்படு பெறுநர் அல்லது விழிப்புணர்வுமிக்க பெறுநர் (Active Recipient)** ஊடகம் அறிவு மிக்கவர்களும், அவற்றை அன்றாட வாழ்வில் பிரயோகிக்கின்ற, தேர்ச்சி மிக்கவர்கள். (தொடர்பாடல் ஊடகக் கற்கை பாடப்புத்தகம், 2009)
ஊடக அறிவில் தொலைக்காட்சி திரைப்படம், வானொலி, ஒலி ஆவணம், அச்சு ஊடகம், இணையத்தளம், மற்றும் புதிய டிஜிட்டல் தொழில்நுட்ப ஊடகங்கள் அனைத்தும் உள்ளடக்கப்படும் என்றும், ஊடக அறிவில் பின்வரும் திறன்கள் உள்ளடக்கப்படுகின்றன.

- உபயோக்கும் திறன்
- பகுப்பாய்வு செய்யும் திறன்
- மதிப்பீடு செய்யும் திறன்
- நிர்மாணிக்கும் திறன்
-

**ஊடக அறிவு தொடர்பில் பின்வரும் தகவல் மூலங்களில் இருந்து இலக்கிய ஆதாரங்கள் பெறப்பட்டன**

- தொடர்பாடல் ஊடகக் கற்கை ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, 2014,
- Nationl policy frame work on General education in Sri Lanka, 2008, page 228-233, Media and Information literay curriculum for teacher education, Draft modules UNEScO, 2009, Neil Andersen,;.Rivk Shephherd, 1993, Wally Bowen, 1996., National communication Association, 1998, media & you, An Elementary curriculum,British film Institute, Londan, .Potter, 1998.
- National Association for media literacy education, 2007., National communication Association, 1998, Aspen media literacy leadership Institute, 1992, Len masterman, 1998,
- Media Development Indicators; A Framework for assessing media development, Susan D. moeller,.Associations and International federation of Library Institutions, media literacy, A Training manual for peace building, 2005.

### 3.0 ஆய்வு முறையியல்

இவ் ஆய்வு எவ்வகையான ஆய்வு வடிவமைப்புக்கு உட்படுத்தி முன்னெடுக்கப்பட்டது என்பது பற்றியும், ஆய்வு வடிவமைப்பும் நியாயப்பாடும், ஆய்வு முறையியல்கள், ஆய்வு கருவிகள், அணுகுமுறை நுட்பங்கள், ஆய்வு குடித்தொகை, மாதிரி எடுப்பு, தரவுப் பகுப்பாய்வு, தரவுகளின் பண்புத்தரம், நீதிசார் விவகாரங்கள் ஆகியவற்றை விபரிப்பதாக இப்பகுதி அமைகிறது.

மாதிரி ஒவ்வொன்றிலிருந்து வினாக்கொத்துகள் ஆய்வாளரினால் நேரடியாக வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டது. இதன் மூலம் ஆய்வாளர் - ஆய்வுக் குடித்தொகைக் கும் இடையில் நம்பகத்தை கட்டியெழுப்புவதற்கு அளவைநிலை ஆய்வு உதவியது. ஆய்வு முறைமையின் இயல்புக்கு ஏற்ப இவ் ஆய்வு மாதிரி எடுத்தல் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற அளவை ஆய்வு முறைமையாக அமைகின்றது. அளவை ஆய்வு முறையில் யாழ். வலயத்தில் நல்லூர் கோட்டத்தில் உள்ள 1AB பாடசாலைகளின் தரம் 12 உயர்தர மாணவர்களில் 120 மாணவர்கள் ஆய்வுக் குடித்தொகையின் மாதிரிகளாக எடுக்கப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**அட்டவணை 01: ஆய்வு மாதிரி**

| பாடசாலை பெயர் | மாணவர் எண்ணிக்கை (தரம் 12) |
|---|---|
| யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி | 268 |
| யாழ். கோண்டாவில் இந்துக்கல்லூரி | 18 |
| யாழ். இந்துக் கல்லூரி | 260 |
| யாழ். இந்து மகளிர் கல்லூரி | 236 |
| யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயம் | 45 |
| **மொத்தம்** | **827** |

*(மூலம் ; ஆய்வாளர் தயாரிப்பு ; 2014)*

பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளனர். மாதிரிகளின் தெரிவு எழுமாற்றாக தெரிவு செய்தல் மூலம் இடம் பெற்றது. இவ் ஐந்து பாடசாலைகளின் மாதிரிகள் ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, மதிப்பிடப்பட்டு முடிவுகள் பெறப்பட்டு, விதப்புரைகள் முன்வைக்கப்படுவதாக இவ் ஆய்வு அமைகின்றது. ஆய்வியலில் கணனி புள்ளி விபரவியல் பயன்படுத்தப்படுவதால் மாதிரி எடுப்பு முக்கியம் பெறுகின்றது. யாழ். வலயத்தின் நல்லூர் கோட்ட 1AB யாடசாலைகளில் தரம் 12 மாணவர்களில் இருந்து மாதிரி எடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

பொதுவாக ஆய்வுக்கான தகவல் சேகரிப்பு முதன்மை தரவுகள், இரண்டாம் நிலை தரவுகள் என்ற அடிப்படையில் இடம்பெறுகின்றன. ஆய்வாளனினால் மாணவர்களுக்கான வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்டன. மதிப்பிடும் பகுப்பாய்வுத்திறன் 17 வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வினாக்கள் ஆம், இல்லை என்பதை அடையாளம் இடுவதாகவும், தெரிவு செய்து அடையாளம் இடுவதாகவும், எண்ணிக்கைக்கு, கால அளவுகளுக:கு ஏற்ப அடையாளம் இடுவதாகவும் தயாரிக்கப்பட்டன. எளிய மாதிரி எடுப்பின் மூலம் தரம் 12 இல் கற்கும் 120 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வாளரின் நேரடி கண்காணிப்பு, மற்றும் வழிகாட்டலுடன் வினாக்கொத்துகள் வழங்கப்பட்டன. ஆய்வாளரினால் அளவைநிலை ஆய்வில் வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு கணனி புள்ளிவிபர நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

வினாக்கொத்து தரவுகள் கணனி புள்ளிவிபர நுட்பங்களின் உதவியுடன் அட்டவணைப்படுத்தல், வரைபுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு, முடிவுகள், அடைவுநிலைகள், வியாக்கியானங்கள் இடம்பெறுகின்றன.தரவுப் பகுப்பாய்வில் வினாக்கொத்தின் துலங்கல்கள் எத்தனை தடவை இடம்பெற்றன. என்பது புள்ளிவிபர கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு வரைபுகள் பெறப்பட்டன.

ஆய்வில் பெறப்படும் தரவுகளின் பண்புத் தரத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக நம்பகம், தகுதி, புறநிலை சூழல் அமைகின்றன. இந்த அடிப்படையில் இவ் ஆய்வில்

ஆய்வாளரினால் ஆய்வு மாதிரிகளுடன் நேரடி வழிகாட்டலுடன் வினாக்கொத்துகளை வழங்கி தரவுகளை பெற்றுக் கொண்டமை ஆய்வு பண்புத் தரத்தை வலுப்படுத்துகின்றது.

ஆய்வின் பண்புத்தர வெளிப்பாட்டை கணிப்பிடுவதற்கு நீதிநெறி சார் விவகாரங்கள் குறிகாட்டியாக அமைகின்றன. ஆய்வு செயன்முறைகளின் ஒவ்வொரு படிநிலைகளிலும் நீதி நெறிசார் விடயங்களை ஆய்வாளர் கவனத்தில் கொள்ளுதல் சிறந்த ஆய்வுநெறியை வெளிப்படுத்தும்.

- தரவு சேகரித்தல்
- தகவல் மூலங்கள்
- ஒப்புதல்

போன்ற செயற்பாடுகள் வலயக் கல்விப்பணிப்பாளர், பாடசாலை அதிபர், மாணவர்களுக்கு உரிய வகையில் முன் அறிவுறுத்தலுடன் பெறப்பட்டன. வினாக்கொத்தில் ஆய்வாளரினால் தகவலின் இரகசியத் தன்மை பேணுதல், ஆய்வுக்கு மட்டும் தகவலை பயன்படுத்துதல் என்பன உறுதிப்படுத்தப்பட்டன.

## 4.0 தரவுப் பகுப்பாய்வும் கண்டறிதல்களும்

ஆய்வாளர்களினால் முன்வைக்கப்பட்ட ஆய்வு பிரச்சினைகளையும், ஆய்வு கருதுகோள்களையும் சோதித்து, அவற்றுக்கு பதில் காண்பதற்கு தரவுப் பகுப்பாய்வு அவசியமாகின்றது. வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட எண் தரவுகள், பண்புத்தர தரவுகள் கணனி புள்ளிவிபர நுட்ப முறை மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு தொடர்பிலான பல்வேறு தகவல்களும் விபரங்களும் பெறமுடிந்தது.

இவ் ஆய்வில் க.பொ.த உயர்தரத்தில் தரம் 12 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வினாக்கொத்து கருவி வழங்கப்பட்டு பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டது.

உயர்தர மாணவர்களிடையே ஊடக விமர்சன அறிவு நிலை எந்தளவு மட்டத்தில் காணப்படுகின்றது, ஊடக விமர்சன அறிவு நிலையின் நிலவரங்கள், பண்புத்தரங்கள், செல்வாக்கு செலுத்தும் நேரடி, மறைமுக காரணிகள், தொடர்புபட்டமையும் காரணிகள் போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதாக இப் பகுதி அமைகிறது.

## 5.0 விமர்சனத்திறன்

***ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற செய்திகளை நீங்கள் நம்பிக்கை கொள்வது***
ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற விடயங்கள் மீது நம்பிக்கை கொள்ளல் 39 பேர் எனவும் (32%) ஆம் எனவும், 81 பேர் (68%) இல்லையெனவும் பதிலளித்துள்ளனர்.

***ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற செய்திகளை நீங்கள் ஏற்றுக் கொள்வது***
ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற செய்தியை ஏற்றுக் கொள்வது ஓரளவு உண்மை என 110 பேர் (92%), முழுமையாக உண்மை 8 பேர் (7%), உண்மையில்லை 2 பேர் (1%) ஆக காணப்படுகின்றனர்.

***ஊடகங்கள் தமது சொந்த இலாபம் கருதியே செயற்படுகின்றன***
ஊடகங்கள் தமது சொந்த இலாபம் கருதியே செயற்படுகின்றன என்பதை 31 பேர் (26%) ஏற்கின்றேன் எனவும், 58 பேர் (48%) நடுநிலை வகிக்கிறேன் எனவும் 18 பேர் (13%) முற்றிலும் ஏற்கிறேன் எனவும் 11 பேர் (9%) மறுக்கிறேன் எனவும் குறிப்பிடுகின்றனர்.

***ஊடகங்கள் விளம்பர நோக்கத்திற்கு முதன்மையளிக்கிறது***

ஊடகங்கள் விளம்பர நோக்கத்திற்கு முதன்மையளிக்கின்றது என்பதை நோக்குகின்றபோது 39 பேர் (32%) நடுநிலையாகவும், 49 பேர் (41%) ஏற்கின்றேன், 26 பேர் (22%) முற்றிலும் ஏற்கிறேன், 4 பேர் (3%) மறுக்கிறேன், 1பேர் (1%) வன்மையாக மறுக்கிறேன் எனக் காணப்படுகின்றனர்.

***வெகுசன ஊடகங்களினால் எமது பண்பாடு, பழக்கவழக்கம் நடத்தைகள் பாதிக்கப்படுகின்றன***

வெகுசன ஊடகங்களினால் எமது பண்பாடு, பழக்கவழக்கம், நடத்தைகள் பாதிக்கப்படுகின்றன என்பதை நோக்குகின்றபோது முற்றிலும் ஏற்கின்றேன் 26 பேர் (22%), நடுநிலை 37 பேர் (31%), ஏற்கிறேன் 52 பேர் (43%), மறுக்கிறேன் 4 பேர் (3%), உண்மையாக மறுக்கிறேன் 1 பேர் (1%) என காணப்படுகின்றனர்.

***உமது தனிப்பட்ட செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிநிரல்கள் ஊடக செயற்பாடுகளால் பாதிக்கப்படுவவதுண்டா?***

உமது தனிப்பட்ட செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் ஊடக செயற்பாடுகளால் பாதிக்கப்படுவது தொடர்பில் நோக்குகின்றபோது 54 பேர் (45%) ஆம் எனவும், 66 பேர் (50%) இல்லை எனவும் பதிலளித்துள்ளனர்.

***ஊடகங்களில் வெளிக்கொணரப்படும் விளம்பரங்களின் நடிகர் நடிகைகள் பிரபல்ய நபர்கள் காட்சிப்படுத்தப்படுவது வியாபார நோக்கத்திற்கே***

ஊடகங்களில் வெளிக் கொணரப்படும் விளம்பரங்களின் நடிகர், நடிகைகள், பிரபல்ய நபர்கள் காட்சிப்படுத்தப்படுவது வியாபார நோக்கத்திற்கே என்பது தொடர்பில் நோக்குகின்றபோது, முற்றிலும் ஏற்கிறேன் 55 பேர் (46%) ஆகவும், நடுநிலை 15 பேர் (14%) ஆகவும், ஏற்கிறேன் 43 பேர் (36%) ஆகவும், மறுக்கிறேன் 3 பேர் (2%) ஆகவும், வண்மையாக மறுக்கிறேன் 1 பேர் (1%) ஆகவும் காணப்படுகின்றனர்.

***விளம்பரங்களில் முதன்மையளிக்கப்படும் நபர்களின் வரிசை***

முதலாம் தெரிவில் பெண்கள் 107 ஆகவும், ஆண்கள் 12 ஆகவும், குழந்தைகள் 01 எனவும், இரண்டாம் பிரிவில் பெண்கள் 01 ஆகவும், ஆண்கள் 47 ஆகவும், குழந்தைகள் 68 ஆகவும், மூன்றாம் தெரிவில் ஆண்கள் 57 ஆகவும், குழந்தைகள் 47 ஆகவும் பெண்கள் 12 ஆகவும் காணப்படுகின்றனர்.

***ஊடக நிறுவனங்கள் ஊடக உரிமையாளர் மற்றும் ஊடக கொள்கையின் அடிப்படையில் இயங்குகின்றன.***

ஏற்கிறேன் 69 (57%), நடுநிலை 25 (21%), மறுக்கிறேன் 5 (4%), முற்றிலும் ஏற்கிறேன் 20 (17%) ஆக காணப்படுகின்றனர்.

***ஆகாரம், அணிகலன், ஆடைகள், வீட்டுப் பொருட்கள், வாகனங்கள் என்பன ஊடகங்கள் மூலம் பிரபல்யப்படுத்தப்பட்டு ஈர்க்கப்படுகின்றன.***

ஆம் என 90 பேர் (75%), இல்லை என 29 பேர் (29.24%), காணப்படுகின்றமை ஊடக பிரபல்யப்படுத்தலின் தாக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

***ஊடகங்களில் செயற்பாடுகளினால் வன்முறை உணர்வுகள் உள நெருக்கீடுகள், மனஅழுத்தங்கள் உருவாகின்றன.***

வன்முறையின் தாக்கங்களை ஏற்பவர்களாக 54 பேர் (45%), நடுநிலையாக 32 பேர் (27%), முற்றிலும் ஏற்பவர்களாக 27 பேர் (22%), மறுப்பவர்களாக 5 பேர் (4%) காணப்படுகின்றனர்.

***ஊடகங்களில் மூலம் சமூக அபிவிருத்தி மற்றும் தனிப்பட்ட அபிவிருத்திகள், வழிகாட்டல்கள், ஆலோசனைகள் வழுங்கப்படுகின்றன***

ஊடகங்கள் மூலம் சமூக அபிவிருத்தி மற்றும் தனிப்பட்ட அபிவிருத்திகள், வழிகாட்டல்கள், ஆலோசனைகள் வழுங்கப்படுவதை 67 பேர் (56%) ஏற்கின்றனர். 35 பேர் (29%) நடுநிலை வகிக்கின்றனர். 10 பேர் (8%) முற்றிலும் ஏற்கின்றனர், 3 பேர் (4%) மறுக்கின்றனர். 2 பேர் (2%) வன்மையாக மறுக்கின்றனர்.

***ஊடகங்களினால் வெளியிடப்படுகின்ற செய்திகளை விமர்சிப்பதில் ஈடுபடுவது***

ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற செய்திகளை தனிப்பட்ட ரீதியில் 9 பேரும், நண்பர்களுடன் 98 பேரும், உறவினர்களுடன் 26 பேரும், ஏனையவர்களுடன் 9 பேரும் விமர்சிப்பதில் ஈடுபடுகின்றனர்.

***சமூகப் பொறுப்புடன் செயற்படுகின்றன.***

சமூகப் பொறுப்புடன் ஊடகங்களின் செயற்பாடுகள் உள்ளன என்பதை 49 பேர் (41%) ஏற்கின்றனர், 52 பேர் (43%) நடுநிலையுடன், 7 பேர் (6%) மறுக்கின்றேன், 6 பேர் (5%) வன்மையாக மறுக்கிறேன், 5 பேர் (4%) முற்றிலும் ஏற்கிறேன் என பதிலளிக்கின்றனர்.

***ஊடகப் பயன்பாட்டினால் வீட்டுச் சந்தோசம்,உரையாடல்கள், உறவுகள்***

ஊடக பயன்பாட்டினால் வீட்டு சந்தோஷம், உரையாடல், உறவுகள் ஊடகங்களினால் 52 பேர் (43%)இ பாதிப்பு உள்ளதாகவும், பாதிப்படையவில்லை என 68 பேர் (57%) கூறுகின்றனர்.

***ஊடகங்கள் சமூக விழுமியங்களையும் சட்டங்களையும் கலாசாரத்தையும் பாதுகாக்கின்றன.***

நடுநிலையாக 61 பேர் (51%) மறுக்கிறேன் 33 பேர் (28%), வன்மையாக மறுக்கிறேன் 10 பேர் (8%), ஏற்கிறேன் 12 பேர் (10%), முற்றிலும் ஏற்கிறேன் 4 பேர் (3%) காணப்படுகின்றனர்.

***வெகுசன ஊடகங்களுக்கும் உமக்கும் இடைத்தொடர்பு இருக்க வேண்டும்***

வெகுசன ஊடகங்களுடன் இடைத்தொடர்பு இருக்க வேண்டும் என்பது தொடர்பில் 98 பேர் (82%) ஆம் எனவும், 22 பேர் (18%) இல்லை எனவும் பதிலளிக்கின்றனர்.

பெறுபேறுகளின பகுபாய்வின் அடிப்படையில. ஊடகவிமர்சன அறிவ்ு மட்டத்தில் பின்வரும் அம்சங்கள் ***கண்டறியப்பட்டுள்ளன.***

- தொலைக்காட்சியில் அறிவியல் நிகழ்ச்சிகளை நுகர்தல் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
- பெருமளவு நேரம் தொலைக்காட்சி வானொலியுடன் செலவு செய்தல்.
- ஊடக செய்திகள்மீது முழுமையாக நம்பிக்கை கொள்ளும் தன்மை காணப்படுகிறது.
- தனிப்பட்ட செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் பாதிக்கப்படுதல் காணப்படல்.
- ஊடக செயற்பாடுகளினால் வீட்டு சந்தோசம், உறவுகள், உரையாடல்கள் பாதிக்கப் படுகின்றமை கண்டறியப்பட்டது.
- ஊடக விளம்பர கவர்ச்சிக்கு உள்ளாகி பொருட்களை நுகர்வதில் ,ஈடுபடுதல் காணப்படல்.
- ஊடக நிறுவனங்களுடன் இடைத்தொடர்பு பேணுவதில்லை என்பது கண்டறியப்பட்டது.
- சமூக வலைத்தளம் ஊடாக செயதிப்பரிமாற்றம் செய்வதில் சராசரி நிலமை காணப்படல்.

- ஊடகங்களுக்கு அபிவிருத்தி, பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துதெரிவிப்பதில்லை என்பது கண்டறியப்பட்டது.

## 5.0 முடிவுரையும் விதப்புரைகளும்

முடிவாக ஊடக விமர்சன அறிவு மட்டம் தாழ்மட்டத்தில் உள்ளமை கண்டறியப்பட்டது. வெகுசன ஊடகங்களின் பயன்பாடு சகல மட்டத்திலும் இன்றியமையாதவையாக காணப்படுகின்றன. ஊடகங்கள் சமூக வளர்ச்சிக்கு பல்வேறு வகையில் உதவுகின்ற அதே வேளை சமூக சீரழிவுக்கும் காரணமாக அமைவதை உணரக்கூடியதாக உள்ளன. ஊடகங்கள் தொடர்பிலான வன்முறைகள், முரண்பாடுகள், எதிர்த்தாக்கங்கள் சமூகத்தில் பின்னிடைவுகளை ஏற்படுத்துவனவாக அமைகின்றன. இத்தகைய பாதிப்புக்களில் இருந்து சமூகத்தை பாதுகாப்பதற்கும், ஆரோக்கியமான சமூக உருவாக்கத்திற்கும் "ஊடக விமர்சன அறிவு" நிலைமையை சகல மட்டத்திலும் கட்டியெழுப்புதல் அவசியமானதாக உணரப்படுகின்றது.

சமூகத்தினதும், மாணவர்களினதும் ஊடக விமர்சன அறிவு நிலையை மேம்படுத்துவதற்கு பாடசாலைகள், பெற்றோர், கல்வி கொள்கை வகுப்பினர், ஊடகத் துறையினர், பல்கலைக் கழகங்கள் ஒன்றிணைந்து பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்தல் மிக அவசியமானது. ஊடக அறிவு நிலையை பாடசாலை மற்றும் சமூகத்தில் அறிமுகம் செய்து படிப்படியாக பல்வேறு செயற்பாடுகள் ஊடாக விருத்தி செய்வதன் மூலம் அபிவிருத்திக்கான சமூக உருவாக்கத்திற்கான தரமான ஊடக விமர்சன மட்டத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஊடக விமர்சன அறிவு நிலையை மாணவர்கள் மத்தியில் மேம்படுத்துவதற்கும், ஊடகங்களின் ஆக்கபூர்வமான பயன்பாட்டுக்கும், எதிர்மறை தாக்கங்களில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமான வெகுசன ஊடக பண்பாட்டு விருத்திக்காக பின்வரும் விதப்புரைகள் முன்வைக்கப்படுகின்றன.

### 5.1 பாடசாலை மட்ட செயற்பாட்டுக்கான விதப்புரைகள்

- பாடசாலை கலைத்திட்டத்தில் ஊடக விமர்சன அறிவை விருத்தி செய்வதற்கு *ஊடக கல்விக்கு* முக்கியத்துவம் வழங்கி செயல் வடிவம் பெறச் செய்தல்.
- பாடசாலை மட்டத்தில் ஊடகக் கழகத்தின் (Media club) ஊடாக ஊடக விமர்சன அறிவு விருத்திக்கான பின்வரும் செயற்றிடங்களை அமுல்படுத்தல்.
  - ஆய்வுத் தேடல் செயற்றிட்டம்
  - திறன் விருத்தி செயற்றிட்டம்
  - ஆக்கத்திறன் செயற்றிட்டம்
  - இரசனை செயற்றிட்டம்
  - சமாதான தொடர்பாடல் செயற்றிட்டம்
  - மக்கள் தொடர்புச் செயற்றிட்டம்
- பாடசாலை மாணவர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் இடையிலான உறவு மேம்பாட்டுக்கான பல்வேறு செயற்றிட்டங்களை விரிவுபடுத்துதல்.
- பாடசாலை மட்டத்திலும், பாடசாலைகளுக்கு இடையிலும் ஊடக விமர்சன அறிவு தொடர்பிலான பல்வேறு போட்டிகளை திட்டமிட்டு நடாத்துதல்.
- ஊடக அறிவு தின (media literacy day) நிகழ்வை பாடசாலை மட்டத்தில் வருடாந்தம் திட்டமிட்டு நடாத்தி, ஊடக விமர்சன அறிவு தொடர்பிலான விழிப்புணர்வை உருவாக்குதல்.

### 5.2 கல்விக் கொள்கை வகுப்பினருக்கான விதப்புரைகள்

- பொதுக்கல்வியில் ஊடக கல்வி உள்ளடக்கங்களுக்கு முதன்மையளித்தல்.
- ஊடகக் கல்வி - ஆசிரிய கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்களை தேசிய கல்வியியற் கல்லூரிகளில் விரிவுப்படுத்துதல்.

### 5.3 ஊடகத்துறையினருக்கான விதப்புரைகள்

- ஊடகங்களின் உள்ளடக்கம் மற்றும் செயற்பாடுகளை ஆரோக்கியமான ஊடக பண்பாட்டை(அநனயை உரடவரசந) உருவாக்கும் வகையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்.
- தொழில்சார் ஊடகவியலாளர்க்கான பயிற்சியையும், கல்வியையும் வழங்கி ஊடக துறையினரின் வாண்மைத்துவத்தை மேம்படுத்துதல்.
- அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் ஊடகத்துறையினருக்கான அறிவூட்டல்களை வழங்குதல்.

### 5.4 பல்கலைக்கழக மட்டத்தினருக்கான விதப்புரைகள்

- ஊடகக் கல்வி பாடத்தை கற்பதற்கான விசேட வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்.
- ஊடகம் தொடர்பிலான ஆய்வுப் புலங்களை இனங்கண்டு விரிவுபடுத்தலும் ஊக்குவிப்புக்களை வழங்குதலும்
- ஆய்வரங்கம், கருத்தரங்குகளை நடாத்தி ஊடக விமர்சன அறிவு தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

### 5.6பொது மக்களுக்கான விதப்புரைகள்

- பொதுசன மட்டத்தில் ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பில் அறிவூட்டல்களையும், அறிவுறுத்தல்களையும் விரிவாக்குதல்.
- பெற்றோர் சிறந்த முன்மாதிரியான நடத்தை கோலத்தை பின்பற்றுதல்.
- பயனுள்ள பொழுதுபோக்குக்கு மாணவர்களை ஊக்குவித்தலும் வழிப்படுத்தலும்

### 5.7அரசசார்ப்ற்ற நிறுவனங்களுக்கான விதப்புரைகள்

- வெகுசன ஊடக கல்வி தொடர்பிலான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் விரிவுபடுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.
- சமூகம் - ஊடகம் இணைந்த ஒன்றிணைந்த செயற்றிட்டங்களை கட்டியெழுப்புதல்.
- பொது மக்களுக்கு ஊடக செயற்பாடுகள் தொடர்பிலான விழிப்புணர்வை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்த செயற்றிட்டங்களை திட்டமிட்டு முன்னெடுத்தல்.

## 6.0 எதிர்கால ஆய்வுகள்

நல்லூர் கோட்ட 1AB பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு ‘‘‘உயர்தர மாணவர்களின் ஊடக அறிவு தொடர்பிலான விமர்சனத்திறனை மதிப்பிடல்’’ எனும் இவ்ஆய்வை அடிப்படையாக கொண்டு எதிர்காலத்தில் பின்வரும் ஆய்வுப் புலங்களில் மேலும் ஆய்வுகளை விரிவுபடுத்தலாம் என ஆய்வாளன் இனங்கண்டுள்ளார்.

- பாடசாலை மாணவர்களின் ஊடக அறிவை மதிப்பிடுதல்.(இலங்கை பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டமைந்தது)
- மாணவர்களின் ஊடக அறிவை மேம்படுத்துதல்.

- மாணவர்களிடம் ஊடக அறிவின்மைக்கான காரணங்களும் தீர்ப்பதற்கான வழிமுறைகளும்
- ஊடக அறிவின்மையினால் ஏற்படும் பிரச்சினைகளும் தீர்வுகளும்.

## Bibilography


Daley .E. (2003) , Expanding the concept of literacy, Educause Review, 32 – 40.

Washington, D.C. (2006) National communication Association.

Jenkins, H. (2003) , media literacy beging at home, MIT Technology Review.

Media literacy, (2005), A Training manual for peace building, National peace council of Sri Lanka.

Media and information literacy curriculum for Teacher Education. Draft modules, (2009) UNESCO.

Introduction to media and Information literacy ; media and you, (2009), module 1, UNESCO.

Global media and information literacy Assessment frame work, (2013), united National Educational Scientific and cultural organization.

Everette, E. Reshaping the media, mass communication in an information age, SAGE Publications, New Delhi.

Cecillavan Feilitzon and catharing By cht, out looks on children and media UNESO international clearing house.

Media and information literacy curriculum for Teacher Education Training of Trainers workshop Hand outs, (2009), Colombo, SriLanka.

Hobbs, R. (2004) Journal Adult & Adolescent literacy.

National policy Frame work on General Education in SriLanka(2008), National committee for formulating a new Education Act for General Education.

Media & Information literacy for children, (2012), workshop Handouts, provincial Department of Education, Northern province.

Dafna lemish, (2007), children and Television, Black well publishing, USA.

Joli Jensen (1990), Redeeming modernity, SAGE publications, California.

Len masteman (1985), Excerpted with permission form Teaching the media London.

Pat Kipping, media literacy an Important strategy for Building peace, Canada.

Rick shepherd, (1993), why Teach media literacy, Quadrant Educational media serrices, Canada.

Wally Bowen, (1996), citizens for media literacy, USA,

Potter W. Jemes (1988), media literacy Thousand oaks CA: Sage.

Study on Assessment criteria for media literacy level (2009), Brussels.

Jounier star(2014), A weekly English supplement of Thinakkural.

Brown, J.A. (1998), media literacy Prespectives Journal of communication.

Robin L. Nabi mary Bith oliver, media processes and effects, SAGE publications, California.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) தொடர்பாடல் மற்றும் ஊடகக்கல்வி தரம் 13 (2014), ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, தேசிய கல்வி நிறுவனம், இலங்கை.

இராஜேஸ்வரன், ப. (2012), தொடர்பாடல் கற்கைப் பிரவேசம், லோயல் பப்ளிகேஷன்ஸ்

தொடர்பாடல் ஊடகக் கற்கை பாடநூல் (2009), கல்வி வெளியீட்டு திணைக்களம்.

ராஜ்குமார், ச. (2004), மிரட்டுவது மீடியா - பெற்றோர்க்கான ஊடக விழிப்புணர்வு,அரும்பு பதிப்பகம், சென்னை.

அருணா செல்லத்துரை, (2008), தொலைக்காட்சி செய்திகள், அருணா வெளியீட்டகம், கொழும்பு.

சண்முகலிங்கன், என். (2013), அறிவின் சமூகவியல் சிந்தனைகள், நாகலிங்கம் நூலாலயம், தெல்லிப்பளை.

ஜெயந்தினி, இ. (2003), தொலைக்காட்சியில் சுய மெய்யுருவம், சமூகவியல்

நுண்ணாய்வு, சமூகவியல் சிறப்புக்கலை ஆய்வுக்கட்டுரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சபாரத்தினம், த. (2009), பத்திரிகையியல் வழிகாட்டி, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், கொழும்பு.

ஜெயராசா, ச. (2000), ஆய்வுமுறையியல், யாழ்ப்பாணம், ஆய்வுக்கழகம்.

சின்னத்தம்பி, க. (2007), கல்வி ஆய்வியல், அச்சுவேலி.

http : //www.natcom.org/NCA/Admin/index.asp? down loaded = 119.

http: //www.unesco. org/education/pdf/media – EPDFwww.cmp.vcr.edu/.. ./medialit. Html

http; //medialit. med.Sc. edu www.rirm. Orglmedia.